# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,961 — 1964 පෙබරවාරි 28 වැනි සිකුරාදා — 1964.2.28

13,961 ஆம் இலக்கம் — 1964 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் — வெற்றிடம் .. .. .. | 51 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 52 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 53 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 54 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணயிதம் .. .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செல்வுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சதவீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுவோர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டு/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டுமே என்று விதிக்கப்பட்டால் ஒழிய, 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சாகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர்; ஆனுல் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிறுர் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாராளுல் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாராளுல், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

**குறிப்பு.**—"புது உத்தியோகத்தர்" என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு, மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தைத் தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

**7. வேறு விதிகள்.**—(i) அரசாங்க சேவையில் இப்போது இருப்பவராயும், வேண்டிய தகைமைகளைக் கொண்டவர்களாயுமுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் தங்கள் பகுதித் தலைவர்கள் மூலம் அனுபபவேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் அனுப்பும் விண்ணப்பங்களை அந்த அந்தப் பகுதித் தலைவர்கள் அனுப்பும்போது, குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவுசெய்யப்பட்டால்) கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்குவிதிக் கிணங்க அவ்விண்ணப்பதாரரை விடமுடியும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சாத்திக்குக் குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்ததி விடயத்தில், தலையிட்டு, அவருக்கு ஆதரவ தேடமுயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்ப, அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப்பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

---

## கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்
## தேவை

**தரக் கட்டுப்பாட்டு உதவியாளர்**

**கல்வித் தகைமை.**—(அ) உயர்தரப் பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் அல்லது இலண்டன் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் இரசாயணம், தாவரவியல்/உயிரினவியல்/தூய கணிதம் என்பவற்றில் சித்தியெய்திருக்க வேண்டும் ;

அல்லது

(ஆ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் இரசாயணவியல், தாவரவியல்/உயிரினவியல்/தூய கணிதம், இவற்றில் விசேஷ திறமை பெற்றவராகவும், அத்துடன் 2 வருடகாலம் பரிசோதனைச்சாலையில் வேலைசெயது அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

**சம்பளம்.**—இந்தத் தொழிலுக்கான சம்பள விகிதமானது—

1,860—3,780
ரூபா ———————— அடிப்படை வருடமொன்றுக்கு
16 120

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் தகுதி நிர்ணய/பரீட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும். அரசாங்க மொழிக்கொள்கையைச் குறிப்பாக 1956 ம் வருடத்திய 33 ம் இலக்க உத்தியோக மொழிச்சட்ட நியதிகளை அமுலாக்கும் முகமாக ஏற்கனவேயும், இதற்கப்புறமும் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பிரஸ்தாப விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கொழும்பில் அல்லது வாழைச்சேனையில் தங்கியிருந்து வேலை செய்யவேண்டும்.

அலவான்சுகள் கூட்டுத்தாபன விதிதங்கள்படி செலுத்தப்படும். தற்சமயம் மேற்படி விகிதங்கள் அரசாங்கம் வழங்கும் விகிதங்களை ஒத்திருக்கின்றன.

விண்ணப்பதாரர்கள், இக்கந்தோரில் கிடைக்கப்பெறும் பாரங்களில் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து 1964 ம் ஆண்டு மார்ச் 16 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்க்காணும் விலாசத்திலுள்ள தலைவருக்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும். தபால்மூலம் விண்ணப்பப்பாரங்களைப் பெற விரும்பும் ஊழியர்கள் தங்கள் விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய ஒரு கடித உறையினை அனுப்பி வைக்கக் கோரப்படுகின்றார்கள்.

தலைவர்,
கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

த. பெ. இல. 1367,
கொழும்பு 1, 1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ந் தேதி.

2–945—28.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,961

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பரீட்சைப் பகுதி
## ஆசிரியர் கலாசாலைப் பிரவேசப் பரீட்சை
(விசேட பயிற்சிகள்)—1964

மேற்படி பரீட்சை சம்பந்தமாக 31.1.64 திகதியிடப்பட்டதும் 14.2.64 ம் வெளியிடப்பட்டதுமான 13,950 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை I ம் பகுதி (II) ம் பிரிவில் பரீட்சைபற்றிய அறிவித்தல் பந்தி 11 (V) யை நீக்கி அதற்குப்பதிலாக கீழ்க்காணும் பந்தியைச் சேர்க்க.

11. (V) வர்த்தகம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) ஒரு வினுப்பத்திரம்—3 மணித்தியாலங்கள் கொண்டது—200 புள்ளிகள் வர்த்தகப் பயிற்சிக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு.

எச். எல். விமலசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2,
1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ந் தேதி.

2–947—28.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,961

## பரீட்சைப் பகுதி

எல்லா அரசாங்க பகுதித் தலைவர்களுக்கும்,
உள்ளூர் அலுவலகத் தலைவர்களுக்கும்.

**சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை**
(அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான)

இப்பரீட்சை 1964 ம் ஆண்டு மே மாதம் 9 ம், 16 ம் திகதிகளில் நடைபெறும். விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதி மார்ச் 20 ம் திகதியாகும்.

2. கடைசியாய் நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவருவதற்குமுன் விண்ணப்பங்கள் அனுப்பக்கூடாது.

எச். எல். விமலசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2,
1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ந் திகதி.

2–942—28.2.64 திகதிய வர்த்தமானி இல. 13,961

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

செங்கலடி உபபிரிவின் கீழ் உள்ள ஊெகல கண்டியா குளத்தைப் புதுப்பித்தல் ஆகிய வேலைக்கான கேள்விபபத்திரங்கள் கொழும்பு 1 ல் உள்ள செயலகத்தில் 355 ம் இலக்க அறையிலுள்ள காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விப் பத்திரச் சபைத்தலைவர் அவர்களால் 1964 ம் ஆண்டு பங்குனி மாதம் 24 ந் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனப் பகுதி இலாகாவில் ரூபா 100,000/- வுக்கும் அதற்கு மேலும் பதிவுசெய்துள்ள மண் வேலைக்கான போதிய இயந்திரங்கள் வைத்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே மேற்படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

மட்டக்களப்பில் உள்ள பெரும் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொண்ட இரு பிரதி கொண்ட விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பைத் தவிர்ந்த ஏனைய கச்சேரியொன்றில் ரூபா 200/- கேள்விப் பத்திரக் கட்டுப் பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து 1964 ம் ஆண்டு பங்குனி மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக நேரங்களில் விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிகமான விபரங்கள் மட்டக்களப்பில் உள்ள பெரும் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

நா. பெரியதம்பி,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1964 ஆண்டு பெப்புருவரி மீ 18 திகதி

2-769—28.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,961

---

## நீர்ப்பாசன திணைக்களம்

### ரஜாங்கனை உட்பிரிவு

ராஜாங்கணைத் திட்டத்தில், அங்கமுவ குளத்தின் வலது கரை ஏழாம் பிரிவு வாய்க்கால்களில் வரும் கட்டட உறுப்புகள் கட்டுவதற்கான கேள்விப் பத்திரங்கள் வடமத்திய பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு பங்குனி மாசம் 24 ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 11 மணி வரைக்கும் ஏற்றுகொள்ளப்படும். அதன் பின் உடனே திறக்கப்படும். கேள்விப்பத்திரம் இலக்கம்—RL 4.

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 30,000 த்துக்கும் அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காய வெற்றுப் பத்திரங்கள், ராஜாங்கணை, தம்புத் தகமத்திலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில், அலுவக நேரங்களில் 1964 ம் ஆண்டு பங்குனி மாசம் 20 ம் திகதி வரைக் கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்க ளின் பதிவுப்புத்தகங்களுடன் தாம் 'இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதி களின் விபரங்களையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக் காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவல கத்தில் ரூபா 50 கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும் இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்தி பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தின் அலுவலக நேரங் களில் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. சீ. டி பெணண்டோ,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
ராஜாங்கணை உட்பிரிவு.

தம்புத்தகம,
1964 ம் ஆண்டு பெப்ரவரி மீ 19 ந உ.

2-806—28.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,961

---

## காணி அபிவிருத்திப் பகுதி

### திருகோணமலையிலிருந்து அல்லைத்திட்டத்திற்கு கட்டிடச் சாமான்களை ஏற்றுமதி செவதற்கு கேள்விகள்

கீழ்க்காணும் கட்டிடச் சாமான்களை, திருகோணமலை பிறடறிக் கோட்டை யிலிருக்கும் காணி அபிவிருத்தி மத்திய பண்டகசாலையிலிருந்து திரு கோணமலை-மட்டக்களப்பு வீதி 52 1/2 மைல் கட்டைக்கு அணித்தாக இருக்கும் அல்லை காணி அபிவிருத்தி பொது கட்டிடத் தாபனத்திற்கு, காணி அபிவிருத்தி மத்திய பண்டகசாலையிலிருந்து திருகோணமலை துறைமுகத்திற்கு வாகன மூலமும் (லொறி), திருகோணமலை துறை முகத்திலிருந்து மூதூர்த் துறைமுகத்திற்கு வள்ள மூலமும், மூதூர்த் துறைமுகத்திலிருந்து அல்லையில் திருகோணமலை-மட்டக்களப்பு 52 1/2 மைல் கட்டைக்கு அணித்தாக இருக்கும் காணி அபிவிருத்தி பொதுக் கட்டிடத் தாபனத்திற்கு லொறி மூலமும் ஏற்றமதி செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் திருகோணமலையிலுள்ள காணி அபிவிருத்தி உத்தியோகத்தரால் 1964 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ம் தேதி மத்தியானம் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) மரங்கள் (கதவுகள், நிலைகள், வெட்டு மரங்கள் முதலியவை)— 4509 க.அடி.

(ஆ) சீமெந்து—1913 அந்தர்.

(இ) ஓடு—46,995

(ஈ) முகட்டோடு—1725

(உ) கிடுகு—25,270 சோடி.

2. கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50/- கட்டுப் பணமாக இக்காரியாலயத்தில் அல்லது வேறு ஏதாவது கச்சேரியில் கட்டிய பற்றுச் சீட்டுக் கொடுக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1964 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ம் தேதி மத்தியானம் 12.00 மணி வரை கொடுக்கப் படும்.

3. கேள்விப் பத்திரங்கள் கொண்ட தபாலுறையில் இடது பக்க மேற்புறத்தில் " திருகோணமலையிலிருந்து அல்லைக்கு கட்டிடச் சாமான் களை ஏற்றுமதி செய்வதற்கு கேள்விப் பத்திரம் " என எழுதப்பட வேண்டும். இக் கேள்விப் பத்திரங்களை பதிவுத் தபால் மூலம் அனுப் பலாம் அல்லது இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடலாம்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வியாளர் அவரது கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு நாட்களுக்குள் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகை யில் 10% பிணைகட்டி திருகோணமலை காணி அபிவிருத்தி உத்தியோ கத்தருடன் திருப்திகரமான முறையில் ஏற்றுமதி வேலையை குறித்த திகதிக்குள் செய்து முடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளல வேண் டும். இவ்விதம் யாரேனும் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்றுமதி செய் வதற்கு மறுத்தால் அல்லது தவறினால் அவர் தவறிய கேள்விக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் கட்டுப் பணங்களையும் இழக்க நேரி டும்.

5. இக்கேள்விப் பத்திரங்கள் 14.3.64 ம் தேதி மத்தியானம் 12.00 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர்கள் சமுகமளிக்க லாம்.

6. இக் கேள்விகளைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற் றையும் கீழ்கை யொப்பமிட்டிருப்பவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மு. சங்கரவேல்,
காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
திருகோணமலை.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
திருகோணமலை, 1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ந் திகதி.

2-922—28.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,961

## வித்தியா பகுதி

### பொது விஞ்ஞான உபகரணங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள், 1963/64

பொது விஞ்ஞான உபகரணங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை, 1964 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 24 ந் திகதி முற்பகல் 10.30 மணிவரை கொழும்பு 3, சேர் ஏனெஸ்ற் டீ சில்வா மாவத்தையிலுள்ள கல்வி, கலாச்சார அமைச்சுக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, விநியோகக் கிளை, வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு, வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1964 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 23 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ஜே. ஏ. பொ்ளுந்து,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1964 ம் ஆண்டு பெப்ருவரி மீ 28 ந் உ.

2–810—28.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,961

## மாத்தறை அரசாங்க அதிபர் திணைக்களம்

மாத்தறை அரசாங்க அதிபரின் கீழுள்ள அரசாங்க வீடுகளை திருத்தவும், வடிகால், தண்ணீர் சேவை வசதிகள் செய்து கொடுத்தலுக்கான கேள்விப் பத்திரங்கள் மாத்தறை அரசாங்க அதிபரினால், 1964 ம் ஆண்டு பங்குனி மாதம் 14 ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இக் கேள்விக்கான வெற்றுப் பத்திரங்களும் சகல விபரங்களும் இந்தக் கந்தோரில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளில் செய்யப்படுதல் வேண்டும்.

பதிவு செய்யப்பட்டதற்கான ருசுவும், 1964 ம் ஆண்டு பங்குனி மாதம் 12 ம் திகதி பி. ப. 3 மணிக்கு முன்பாக ரூ. 10 வைப்புப் பணமாக செலுத்தியதற்கான ரசீதும் காட்டப்படுமிடத்து பகிரங்க வேலைப் பகுதியில், நீர்ப்பாசன திணைக்களத்தில் அல்லது கல்வித் திணைக்களத்தில் பதியப்பட்ட கண்ட்ராக்டர்களும்—பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் விண்ணப்பம் செய்ய தகுதி பெற்றவர்கள். (பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் கிராம அபிவிருத்தி சங்கங்களும் மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளாகிய ருசுவும்–ரசீதினும் இருந்து தவிர்க்கப்படுகின்றனர்.)

எச். ஆர். அமித்,
அரசாங்க அதிபர்,
மாத்தறை.

கச்சேரி, மாத்தறை,
1964 ம் ஆண்டு பெப்ரவரி மீ 21 ந் உ.

2–902—28.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,961

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா—கேள்விப்பத்திர முடிவுகள்

| வேலையின் விபரம் | கிடைத்துள்ள கேள்விப் பத்திரங்களின் தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பக்காரரின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை |
|---|---|---|---|
| முல்லைத்தீவு உபபிரிவின் கீழ் உள்ள முத்து ஐயன் கட்டுக்குளத்தின் இடது பக்க பெரு வாய்க்கால் அமைத்தல் 2 வது மைல் தொடக்கம் 5 வது மைல் வரைக்கும் | 1 | மக்ஷிப்டர் (ப்ரைவேட்) லிமிட்டட், கொழும்பு 3. | ரூபா 258,725/– |

ஆர். எஸ். தர்மானந்தர்,
பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வடபகுதி.

வவுனியா, 1964 ம் ஆண்டு பெப்ரவரி மீ 19 ந் உ.

2–880—28.2.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,961

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.